வாருங்கள் அன்பு மாந்தரே

வாருங்கள் அன்பு மாந்தரே
பலிசெலுத்த வாருங்கள்
பண்ணிசைத்துப் பாடுங்கள்.
வாருங்கள் அன்பு மாந்தரே

1
இயேசு என்னும் ஆதவன்
கதிர் விரிக்கக் காணுங்கள்
இதயம் என்ற மலர் விரித்து
மணம் பரப்ப வாருங்கள்; (2)
ஆசை என்ற இருள் மறைந்து
அன்பு உதயமாகவே (2)
அருள் வழங்க இதயம் சேரும்
அன்புருவைக் கேளுங்கள்

2
அன்பு என்றால் என்னவென்று
அவனைக்கேட்டுப் பாருங்கள்
அத்தனையும் தருவதுதான்
அன்பு என்று கூறுவான்; (2)
தன்னை ஈந்து அன்பு செய்த
தேவன் இன்று வருகின்றான் (2)
நம்மை முற்றும் தந்து இன்பம்
யாவும் பெற்;றுத் திரும்புவோம்